கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 02ம் தேதி சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.2/2023
இன்
அசல் வழக்கு எண்.80/2017
* * * *

1. ராமன் (இறப்பு)
2. கந்தன்
3. சங்கையா
4. காளிதாஸ்
5. மீனாட்சி
6. அழகம்மாள்
7. லீலாவதி ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. ராமச்சந்திரன்
2. நாகராஜன்
3. சந்திரன்
4. வட்டாட்சியர் அவர்கள்,
திருமங்கலம்
5. தமிழ்நாடு அரசுக்காக,
மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
மதுரை ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது 23.07.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது 2 முதல் 7 மனுதாரர்கள்/2 முதல் 7 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கருணாகரன் அவர்கள் ஆஜராகியும், 4,5 எதிர்மனுதாரர்கள்/4,5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் வாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்டளை 9 விதி 9ன் கீழ் கடந்த 01.02.2023ல் மனுதாரர்கள்/வாதிகளின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கான O.S.80/2017ஐ திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டி 4ம் மனுதாரர்/4ம் வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், கடந்த 01.02.2023ல் மனுதாரர்கள்/வாதிகளின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கினை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டி இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவினை அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) 4,5 எதிர்மனுதாரர்கள்/4,5 பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

1.4) 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவில் ஆஜராகததால் 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**2) தீர்வு:–**

இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

2.1) மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக கடந்த 01.02.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், 4ம் மனுதாரர்/4ம் வாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அசல் வழக்கில் அன்றைய தினம் ஆஜராக முடியவில்லை என்றும், எனவே மேற்படி 4ம் மனுதாரர்/4ம் வாதியின் வருகையின்மையானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, அசல் வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டும் என்று மனுதாரர்கள்/வாதிகள் மனுவில் கூறியுள்ள காரணமானது சட்டப்படியானது என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி 4ம் மனுதாரர்/4ம் வாதியால் மேற்படி 01.02.2023ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்யவேண்டும் என்ற

இம்மனுவானது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டும், ஒரு வழக்கில் உரிய பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இரு தரப்பினர்களின் சாட்சி, சான்றாவணங்கள் அவசியம் என்பதையும் கருத்தில்கொண்டும், இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

2.2) மேலும், அசல் வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கும்போது மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தவறாமல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அசல் வழக்கினை காலம் கடத்தாமல் மேல்நடத்தவேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 02.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.08.02 17:48:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.08.02 17:48:21 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.2/2023
இன்
அசல் வழக்கு எண்.80/2017
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 02.08.2025